அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2022

# தமிழ்

# ஆண்டு 10

| | |
|---|---|
| நேரம்: 180 மணித்துளிகள் | மொத்தப்புள்ளிகள்: 80<br>(எழுதுதல் 65 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்) |
| நாள்: 04.06.2022 | பக்கங்கள்: 20 |

சுட்டெண்: | | | | | | | | | | |

## பகுதி 1 – எழுதுதல்

**1. பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1. மொழிக்கு இறுதியில் வராத மெய்யெழுத்துகளைக் கொண்ட தொகுதி
   1. ண், ன், ல்
   2. ன், ம், ழ்
   3. த், ப், ற்
   4. ள், ய், ர்

2. ஓயாமல் அடிக்கின்ற அலைகள். ஓயாமல் என்பது
   1. பெயரெச்சம்
   2. வினையெச்சம்
   3. எதிர்மறைப் பெயரெச்சம்
   4. எதிர்மறை வினையெச்சம்

3. பெற்றோர், வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் ஆகிய மூவருக்கும் துணையாக இருக்க வேண்டியவர் எனத் திருவள்ளுவர் கூறுவது
   1. தென்புலத்தார்
   2. இல்வாழ்வான்
   3. துறவியர்
   4. விருந்தினர்

4. பண்டங்களைப் பகுத்து விலை கூறுவது
   1. ஓதுதல்
   2. பறைதல்
   3. பகர்தல்
   4. சாற்றுதல்

5. வேடன் துரத்திய மான் அஞ்சி ஓடியது. இச்சொல்லியத்திற்குப் பொருத்தமான அடுக்கிடுக்குத்தொடர்
   1. கொதிகொதித்து
   2. தெட்டத்தெளிந்து
   3. செக்கச்சிவந்து
   4. பதைபதைத்து

6. மெய்யெழுத்துகள் எல்லாம் புள்ளி பெறும் எனக் கூறும் நூல்
   1. சிலப்பதிகாரம்
   2. தொல்காப்பியம்
   3. கலித்தொகை
   4. தண்டியலங்காரம்

1 2 3 4

7. உறவுக்குத் தோள் கொடுக்க வருக! இச்சொல்லியம்
   1. வியங்கோள்
   2. வினா
   3. மெய்ப்பாடு
   4. கூற்று

8. நெய்தல் நிலத்துக்குரிய உரிப்பொருள்
   1. பிரிதல்
   2. ஊடல்
   3. இரங்கல்
   4. இருத்தல்

9. குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி போன்ற காப்பியங்கள் தோற்றம்பெற்ற காலம்
   1. பல்லவர்காலம்
   2. சோழர்காலம்
   3. சங்ககாலம்
   4. அறநூற்காலம்

10. பனையின் தொகுதி கூடல் என்பது போலத் தென்னையின் தொகுதி
   1. வரிசை
   2. குவியல்
   3. கூட்டம்
   4. தோப்பு

11. கவிதை சேரனால் எழுதப்பட்டது. இச்சொல்லியம்
   1. செய்வினை
   2. செயப்பாட்டுவினை
   3. பிறவினை
   4. தன்வினை

12. அரங்கேற்றம் பற்றி விரிவாகக் கூறும் செவ்விலக்கியம்
   1. மணிமேகலை
   2. அகநானூறு
   3. சிலப்பதிகாரம்
   4. திருக்குறள்

13. எலி, நண்டு ஆகியவற்றின் வாழிடம்
   1. வளை
   2. கூடு
   3. கொட்டில்
   4. தொழுவம்

1 2 3 4

14. கேட்டலும் பார்த்தலும் இணைந்த ஊடகம்
1. வானொலி
2. தொலைக்காட்சி
3. தொலைவரி
4. செய்தித்தாள்

15. கோடை காலத்தில் வெப்பம் கூடுதலாக இருக்கும். இதில் உடனிலை மெய்ம்மயக்கமாக வந்த சொல்
1. கோடை
2. காலம்
3. கூடுதல்
4. வெப்பம்

16. அக்கா வளையல் அணிந்தார். வளையல் என்பது
1. இடுகுறிப்பெயர்
2. காரண இடுகுறிப்பெயர்
3. காரணப்பெயர்
4. பொதுப்பெயர்

17. ஒரு கருமத்தில் பற்று வைத்தால் அது நிறைவடையும் என்ற பொருள் தரும் பழமொழி
1. மனமுண்டானால் இடமுண்டு
2. உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசாதே
3. இளங்கன்று பயமறியாது
4. அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்

18. நடுகற்கள் மறவர்களின் வீரத்திற்கும் ஈகத்திற்கும் சான்றாகின்றன. இதில் வந்துள்ள தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொல்
1. கு
2. இன்
3. உம்
4. கின்று

19. திங்கள் + கிழமை என்பதன் புணர்ச்சி வடிவம்
1. திங்கள்க்கிழமை
2. திங்கள்கிழமை
3. திங்கற்கிழமை
4. திங்கட்கிழமை

1 2 3 4

20. தமிழரது முதலாவது புலப்பெயர்வாகக் கொள்ளக்கூடியது
    1. சிந்துவெளியை விட்டுப் புலம்பெயர்ந்தமை
    2. தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தமை
    3. பிரித்தானியர் ஆட்சிக்காலப் புலப்பெயர்வு
    4. 1983ஆம் ஆண்டிற்குப் பின்னரான ஈழத்தமிழர் புலப்பெயர்வு

21. அழியாத்தன்மை என்ற பொருள் தரும் உவமைத்தொடர்
    1. வெயில் முன் பனி போல
    2. காட்டுத்தீ போல
    3. பூவும் மணமும் போல
    4. கல்மேல் எழுத்துப் போல

22. மரங்கள் சடசட என்று முறிந்து விழுந்தன. சடசட என்ற இரட்டைக்கிளவி குறிப்பது
    1. இயக்கம்
    2. தோற்றம்
    3. ஒலி
    4. உணர்வு

23. பாம்பு, ஒலி, சிலம்பு ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு சொல்
    1. அரவம்
    2. சலங்கை
    3. ஒளி
    4. சீற்றம்

24. மட்பாண்டம் வனைதல், நெசவு நெய்தல் போன்றன
    1. இன்கலைகள்
    2. கவின்கலைகள்
    3. பயன்கலைகள்
    4. நாட்டுப்புறக் கலைகள்

25. ஈழத்தின் இருதேசங்களையும் ஒன்றிணைத்த அரசியல் சீர்திருத்தம்
    1. டொனமூர்
    2. கோல்புறூக்
    3. மானிங்
    4. சோல்பரி

(25 x 1 = 25 புள்ளிகள்)

**2. தரப்பட்டுள்ள வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. புலப்பெயர்வு என்றால் என்ன?

2. தமிழ் இலக்கிய வரலாற்றில் சோழர்காலம் ஏன் பொற்காலம் எனக் கூறப்படுகிறது?

3. தொல்காப்பிய உரையாசிரியர்களுள் இருவரின் பெயர்களை எழுதுக.

4. தமிழர் தாயகப் பகுதியில் சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்வதற்குக் கால்கோள் இடப்பட்ட இடங்கள் இரண்டையும் எழுதுக.

5. சொல்லிய உறுப்புகளும் அவற்றுள் இரண்டிற்கு அடைமொழிகளும் அமையுமாறு சொல்லியம் ஒன்று எழுதுக.

6. மூவகை மொழிகளுள் பொதுமொழி, தொடர்மொழி என்பவற்றுக்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு எழுதுக.

பொதுமொழி: ______________ தொடர்மொழி: ______________

7. கீழ்வரும் தன்வினைச் சொற்களைப் பிறவினைச் சொற்களாக எழுதுக.

எழுதினான்: ______________ நடித்தான்: ______________

(5 X 2 = 10 புள்ளிகள்)

**3. பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

வள்ளுவர் தந்த திருமறையைத் - தமிழ்
மாதின் இனிய உயிர்நிலையை
உள்ளம் தெளிவுறப் போற்றுவமே - என்றும்
உத்தமராகி ஒழுகுவமே.

தேனிலே ஊறிய செந்தமிழின் - சுவை
தேரும் சிலப்பதி காரமதை
ஊனிலே எம்முயிர் உள்ளளவும் - நிதம்
ஓதி யுணர்ந்தின் புறுவோமே.

கற்றவர் மெச்சும் கலித்தொகை - யாமின்பக்
கற்பனை சேருங் களஞ்சியத்தை
முற்ற அளந்து தெரிவோமே - காதல்
மூழ்கும் துறைகண்டு வாழ்வோமே.

- கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

1. தமிழ் மாதின் உயிர்நிலை என்று கூறப்படுவது எது?

______________________________

2. சிலப்பதிகாரம் எத்தகைய சுவையைத் தருகிறது?

______________________________

3. சிலப்பதிகாரத்தை எதுவரை ஓதியுணர்ந்து இன்புற வேண்டும்?

______________________________

4. கலித்தொகையை மெச்சுவோர் யாவர்?

______________________________

(4 X 1 = 4 புள்ளிகள்)

**4. தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து, அதனை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக.**

மாந்தருக்கும் இயற்கைக்கும் மிக நெருக்கமான தொடர்பு உண்டு. இயற்கையும் சுற்றுச்சூழலும் இயல்பான நிலையில் இருந்தால் மட்டுமே மாந்தரும் ஏனைய உயிரினங்களும் நலமாக வாழமுடியும். ஆனால், இன்று மாந்தர் தங்கள் உடனடித் தேவைகளை நிறைவு செய்வதற்காக இயற்கையை அழித்து, அதன் சமநிலையைக் குழப்புகின்றனர். இயற்கை அழகானது. அது மனத்தைக் கவர்வதுடன் வியப்பையும் ஏற்படுத்தக்கூடியது. மலை, அருவி, ஆறு, காடு, கடல், வானம் போன்றவற்றின் பேரழகைக் காண்பதற்குக் கண்கள் கோடி வேண்டும். அதேவேளை, இயற்கையானது மாந்தரையும் மாந்தரால் செயற்கையாக உருவாக்கப்பட்ட அனைத்தையும் சில மணித்துளிகளுக்குள் அழித்துத் தரைமட்டமாக்கும் அளப்பரிய ஆற்றலையும் கொண்டுள்ளது. எரிமலை, நிலநடுக்கம், கடற்கோள், வெள்ளப்பெருக்கு, சூறாவளி, காட்டுத்தீ போன்றவற்றால் ஏற்படும் பேரிடர்களை மாந்தரால் எதுவும் செய்யமுடியாது. தற்போது வளர்ச்சியடைந்துள்ள அறிவியலின் துணையுடன் இயற்கையின் தாக்கம் பற்றி மாந்தரால் ஓரளவுக்கு முன்கூட்டி அறியமுடியுமேயன்றி, கட்டுப்படுத்த முடியாது.

(3 புள்ளிகள்)

5. தரப்பட்டுள்ள உரைப்பகுதியை உமது வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

ஆங்கிலம்:

Food, clothing and shelter are the basic necessities of the human beings. Among these, food helps the body growth and keep the body disease free. We should include vegetables, fruits, eggs, milk and meat in our diet. These give the body organs the strength to function well. Not only food but also clean water is also essential for good health.

யேர்மனி:

Nahrung, Kleidung und Unterkunft gehören zu den Grundbedürfnissen der Menschen. Von diesen unterstützt die Nahrung das körperliche Wachstum und das Vorbeugen von Krankheiten. Zu unserer Ernährung sollten wir Gemüse, Früchte, Ei, Milch und Fleisch hinzufügen. Diese helfen unseren Organen die Kraft zu geben, um ordentlich zu funktionieren. Nicht nur die Ernährung, sondern auch reines Wasser ist notwendig für unsere körperliche Gesundheit.

நோர்வே:

Grunnleggende behov for mennesker er mat, klær og bosted. Blant disse er mat viktig for kroppens utvikling og for å holde den sykdomsfri. Vårt kosthold bør inneholde grønnsaker, frukt, egg, melk, kjøtt og lignende. Disse vil gi kroppens organer styrke slik at de kan fungere bra. Ikke bare mat, men også rent vann er viktig for et godt velvære.

இத்தாலி:

L'alimentazione, l'abbigliamento e il rifugio sono necessità fondamentali per l'uomo. Tra questi l'alimentazione serve per lo sviluppo del corpo e per mantenerlo privo di malattie. Nella nostra alimentazione dobbiamo includere verdure, frutta, uova, latte e carne. Questi forniscono le risorse necessarie affinché gli organi funzionino adeguatamente. Non solo il cibo ma anche l'acqua pulita è indispensabile per una buona salute del corpo.

நெதர்லாந்து:

Voeding, kleding en een onderdak zijn de basis behoeften van de mens. Hier van is voeding nodig voor de groei van het lichaam en om het lichaam te beschermen tegen ziekten. Bij de voeding die wij eten moeten groenten , fruit, ei, melk en vlees opgenomen worden in onze voeding. Deze voedings middelen zullen de organen de kracht geven om goed te functioneren. Naast goede voeding is schoon water ook essentieel voor de goede gezondheid.

டென்மார்க்:

Menneskets grundlæggende behov er mad, tøj og bosted. Mad er med til at udvikle kroppen og holde kroppen rask. Vores mad skal indeholde grøntsager, frugt, æg, mælk og kød. De er med til, at kroppens dele fungerer optimal. De er med til at gøre, at legemsdelene fungerer rigtig. Ikke kun mad, men vand er også vigtigt for koppens sundhed.

சுவீடன்:

Mat, kläder och relationer är människans basala behov. Av dessa hjälper mat och kläder tillväxt samt för att ha kroppen utan några sjukdomar. I maten vi äter ska vi ha med grönsaker, frukt, ägg, mjölk och kött. Dessa ger effekter som gör att kroppsorganen fungerar som de ska. Förutom mat är också rent vatten väsentligt för kroppen

பின்லாந்து:

Ruoka, vaatteet ja koti ovat ihmisen perustarpeita. Näiden lisäksi, ruokaa tarvitaan kehon kasvuun ja ylläpitämään kehoa ilman sairastamista. Ruokaan pitäisi lisätä kasviksia, hedelmia, munia, maitoa ja lihaa. Nämä auttavat kehon osien toimintaa ja antavat voimia. Ruoan lisäksi puhdas vesi on myös tärkeä kehon terveyteen.

தமிழ்:

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

(4 புள்ளிகள்)

**6. பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவுசெய்து ஆறு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. அன்பு

2. 

(4 புள்ளிகள்)

7. **தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. அரங்கேற்றம்
2. ஊடகத்தமிழ்
3. வீதி விபத்து

**உள்ளடக்கக் குறிப்புகள்:**

- விபத்துக்கான காரணங்கள்
- அதனால் ஏற்படும் விளைவுகள்
- கட்டுப்படுத்த மேற்கொள்ளும் வழிமுறைகள்

(15 புள்ளிகள்)

## பகுதி 2

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

இவ்வுலகில் நாம் வாழும் காலத்தைக் குழந்தைப்பருவம், இளமைப்பருவம், முதுமைப்பருவம் என்ற மூன்று பகுப்புகளுக்குள் அடக்கிக் கொள்ளலாம். குழந்தையாகவும் முதியவர்களாகவும் வாழும் காலத்தில் நாம் மற்றவர்களைச் சார்ந்தே இருக்கின்றோம். குழந்தைகளாக இருக்கும்போது பெற்றோரையும் முதியவர்களாக இருக்கும்போது பிள்ளைகளையோ அல்லது வேறு உறவுகளையோ சார்ந்தே வாழ்கின்றோம். இளமைப் பருவத்திலேயே நாம் தனித்தன்மையான ஒரு வாழ்க்கையை வாழ்கிறோம். எம் குழந்தைப் பருவத்துக் கனவுகள், இலட்சியங்களை நிறைவேற்றிக் கொள்ளவும் எதிர்கால வாழ்வைத் தனக்கும் பிறருக்கும் பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ளவும் முழுமூச்சுடன் முயற்சிக்கும் காலமும் இதுதான். அத்துடன், புலம்பெயர் தேசங்களில் வாழும் இளையோருக்குத் தம் தாயக உறவுகளுக்குக் கைகொடுக்க வேண்டிய தேவையும் இருக்கிறது. இங்குள்ள அறிவியல் தொழில்நுட்ப வளங்களை அவர்களின் மேம்பாட்டிற்குப் பயன்படுத்தலாம். மாணவர்களின் கல்வி, குடும்பத்தலைவர்களை இழந்த குடும்பங்களுக்கான வாழ்வாதாரங்கள் வழங்குதல், மூதாளரைப் பேணுதல் போன்ற பல்வேறு வழிகளில் அவர்களுக்கு உதவலாம். புலம்பெயர் தேசங்களிலும் பல முதியவர்கள் மூதாளர் காப்பகங்களில் சேர்க்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு வேண்டியதெல்லாம் அரவணைப்பும் தம் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள உறவுகளுந்தான். இளையோர் தம்முடைய பொழுதுகளை இத்தகைய மூதாளர்களைச் சந்திப்பதற்கும் செலவிடலாம். புலம்பெயர் தேசத்து இளையோர் தமது தாய்மொழியையும் பண்பாட்டையும் பேணி, அவற்றை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்லவேண்டும் என்பதையும் மறக்கக் கூடாது.

1. நாம் இளமைக் காலத்தில் எவற்றை நிறைவேற்றிக்கொள்ள முயற்சிக்கிறோம்?

2. எம் இவ்வுலக வாழ்க்கைக் காலத்தை எவ்வாறு பகுத்துக் கொள்ளலாம்?

3. புலம்பெயர் இளையோர் எவற்றை மறக்கக் கூடாது?

4. இளையோர் தாயக உறவுகளுக்கு உதவக்கூடிய வழிகள் இரண்டை எழுதுக.

5. மூதாளர் காப்பகங்களில் உள்ள முதியவர்களுக்குத் தேவையானவை எவை?

(5 x 2 = 10 புள்ளிகள்)

2. விளம்பரத்தை வாசித்து, தரப்பட்ட கூற்றுகள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( × ) எனவும் அடையாளமிடுக.

**சுவீடன் நாட்டில் அறிவொளி வழங்கும் அரிய வாய்ப்பு!**

**ஓராண்டு கால கணினிப் பயிற்சி வகுப்பு!**

இன்றைய வாழ்வில் கணினிப் பயன்பாடு ஓர் அங்கமாகி விட்டது. இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்மொழி மூலமான கணினிப் பயிற்சி வகுப்புகளைத் தொடங்கவுள்ளோம். இப்பயிற்சி வகுப்புகள் இரண்டு பிரிவுகளாக நடைபெறும்.



**பிரிவு 1:** 15 அகவை முதல் 20 அகவை வரையானோர்
**நாள்:** சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை
**நேரம்:** 9:00 – 10:30

**பிரிவு 2:** 20 அகவைக்கு மேற்பட்டோர்
**நாள்:** செவ்வாய்க்கிழமை, வியாழக்கிழமை
**நேரம்:** 19:00 – 20:30

ஒரு குழுவில் 20 மாணவர்கள் வரை மட்டுமே இணைத்துக்கொள்ளப்படுவார்கள். ஒவ்வொருவருக்கும் கற்பித்தல் வேளையில் தனித்தனிக் கணினிகள் வழங்கப்படும். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் இணைந்துகொண்டால் கட்டணக்குறைப்பு வழங்கப்படும்.

**மேலதிக தொடர்புகளுக்கு:** அறிவொளி கல்வி நிலைய இணையத்தை நாடுங்கள்.

1. பிரிவு 1 இல் 20 அகவைக்கு மேற்பட்டோர் இணைக்கப்படுவார்கள். ( )

2. பிரிவு 2 இற்குச் செவ்வாய்க்கிழமையும் வியாழக்கிழமையும் வகுப்பு நடைபெறும். ( )

3. ஒரு பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே இணைத்துக்கொள்ளப்படுவார்கள். ( )

4. ஒவ்வொருவரும் கற்பித்தல் வேளையில் வீட்டிலிருந்து கணினிகளைக் கொண்டுசெல்ல வேண்டும். ( )

5. இக்கணினிப் பயிற்சி வகுப்புக் காலம் ஓராண்டு. ( )

(5 x 1 = 5 புள்ளிகள்)